மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தயவு செய்து தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன். இது கட்டடத்தைப் பற்றிய பிரச்னை.

அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோயில், திருவண்ணாமலை.

*வினா 524.—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோயில் கும்பாபிஷேகம் நடந்து முடிந்ததற்கு பிறகும் புதுப்பிக்கும் வேலைகள் நடைபெற்று வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் புதுப்பிக்கும் வேலைகள் எப்பொழுது முடிவடையும்?

(இ) புதுப்பிக்கும் வேலைகளுக்கு எவ்வளவு ரூபாய் செலவாகும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத்தலைவர் அவர்களே,

(அ) திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயத்தின் கும்பாபிஷேகம் 1976ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்றது அதன் பின் அவ்வாலயத்தின் வடக்கு ராஜ கோபுரத் திருப்பணியும், தெற்கு ராஜ கோபுரத் திருப்பணியும் 1977ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஆரம்பிக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன.

(ஆ) 1979ஆம் ஆண்டு ஜுன் மாதத்திற்குள் இத்திருப்பணிகள் முடிவடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) இரண்டு திருப்பணிகளுக்கும் எதிர்பார்க்கப்படுகிற உத்தேசச் செலவு ரூ. 5,10,000.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் தேவஸ்தான திருப்பணி உத்தேச மதிப்பீட்டை விடக் கூடுதலான செலவினங்களைச் செய்து பணி செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 மார்ச் 24]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த இரண்டு கோபுரத் திருப்பணிகளுக்கும் சுமார் ஐந்து இலட்சம் ரூபாய் செலவாகலாமென எதிர்பார்க்கப்பட்டிருக்கிறது. இப்பொது ஆண்டுகள் கடந்திருப்பதால் பத்தாயிரம் ரூபாய் அதிக மாகலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9.40)

திரு. க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்படி இந்தக் கோயில் பணியில் தங்களை முழுமையாக ஒப்ப படைத்துக் கொண்டிருக்கிற ஊழியர்களை அரசு ஊழியர் களாக்க, சில கோயில்களில், உத்தரவு போடப்பட்டது. அது அமுல் படுத்தப்படவில்லையென்று கூறப்படுகிறதே (மணியடிக் கப்பெற்றது) நேற்று கூட விவரம் சொல்லியிருக்கிருர். எனவே, அதை அமுல்படுத்த இந்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது கோவில் கும்பாபிஷேகம் பற்றிய கேள்வி. இதில், ஊழியர்களைப் பற்றிய கேள்வி கேட்டால் எப்படி பதில் சொல்லமுடியும்? அமைச் சரிடம் பதில் இருந்தால் சொல்லலாம்.

திரு. க. சுப்பு: நம்முடைய அமைச்சரவர்கள் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாவிட்டாலும் என்று பதில் சொல்லி பழக்கப் பட்டவர்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இது திருவண்ணாமலை அருள்மிகு அருணா சலேஸ்வரர் கோவிலின் கோபுரத் திருப்பணிகளைப் பற்றிய கேள்வி. மாண்புமிகு உறுப்பினரவர்கள் மிக விவரம் தெரிந்த உறுப்பினர், சட்டம் தெரிந்த உறுப்பினர். தனிக் கேள்வி போட்டால்தான் விவரம் சேகரித்துக் தர இயலும் என்று அவரு ருக்குத் தெரியும்.

Tourist Hotel in Mudhumalai Forest area.

*Q. 525.—THIRU K. ABDUL LATHEEF, THIRU S. M. VASAN: Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state:

(*a*) Whether the Tamil Nadu Tourism Development Corporation has proposed to construct a luxury hotel in the Mudhumalai forest area; and

(*b*) if so, the details thereof?